செ.வெ. எண்: 342 நாள்: 16.06.2012

# செய்தி வெளியீடு

முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்புத் தன்மையை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட உச்ச நீதிமன்றக் குழு, அணையினுடைய மையப் பகுதியின் உறுதி தன்மையை கண்டறியும் ஆய்வு உட்பட பல்வேறு தொடர் ஆய்வுகளை நடத்த உத்தரவிட்டது. இதனையடுத்து, அணையில் துளைகள் போடப்பட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டன. இந்த ஆய்வுகளுக்குப் பிறகு, முல்லைப் பெரியாறு அணை வலுவாக உள்ளதாக உச்ச நீதிமன்றக் குழு உச்ச நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தது.

இதனையடுத்து, ஆய்வினை மேற்கொள்வதற்காக போடப்பட்ட துளைகள் அடைக்கப்பட வேண்டும் என்ற உச்ச நீதிமன்றக் குழுவின் அறிவுரைக்கிணங்க, இந்தப் பணியை தமிழக அரசின் அதிகாரிகள் மேற்கொண்டபோது, அந்தப் பணியை மேற்கொள்ள விடாமல் தமிழக அதிகாரிகளை கேரள அரசு தடுத்தது.

இந்தச் சூழ்நிலையில், முல்லைப் பெரியாறு அணையில் போடப்பட்ட துளைகள் பருவமழை துவங்குவதற்கு முன்பாக அடைக்கப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி, துளைகளை அடைக்கும் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக கட்டுமானப் பொருட்களுடன் தமிழகத்தைச் சேர்ந்த பொதுப் பணித் துறை பொறியாளர்கள் முல்லைப் பெரியாறு அணைக்கு செல்வதை தடுக்க வேண்டாம் என கேரள அரசுக்கு ஆலோசனை கூறவேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.5.2012 அன்று பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதி இருந்தார்கள்.

இதனையடுத்து, கேரள அரசு துளைகளை அடைக்கும் பணியினை தடை செய்யமாட்டோம் என உறுதி அளித்தது. இதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில், தமிழ்நாடு அரசு அனுப்பிய சிமெண்ட் மூட்டைகளை முல்லைப் பெரியாறு அணைக்கு எடுத்துச் செல்வதை கேரள அரசின் வனத் துறை அதிகாரிகள் தடுத்தனர்.

இது குறித்து 15.6.2012 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தலைமைச் செயலாளர், காவல் துறை தலைமை இயக்குநர் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்கள். இந்தக் கூட்டத்தின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இது குறித்து கேரள அரசின் தலைமைச் செயலாளருடன் பேசுமாறு தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கும், கேரள அரசின் காவல் துறை தலைமை இயக்குநருடன் பேசுமாறு தமிழக அரசின் காவல் துறை தலைமை இயக்குநருக்கும் உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் கேரள அரசின் தலைமைச் செயலாளருடனும், தமிழக அரசின் காவல் துறை தலைமை இயக்குநர் கேரள அரசின் காவல் துறை தலைமை இயக்குநருடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதையடுத்து, 500 சிமெண்ட் மூட்டைகள் பணிகள் நடக்கும் இடத்திற்கு கொண்டு சேர்க்கப்பட்டன. தற்போது துளைகள் அடைக்கும் பணிகள் மீண்டும் துவங்கப்பட்டுவிட்டன.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9